**தேதி:- 01.04.2021 அசல்வழக்கு எண். 148/2010 பி.சா.2 (சந்திரன்)**

**குறுக்கு விசாரணை:- (வாதிகள் தரப்பில்)**

நான் பி.யூ.சி படித்துள்ளேன். 18 ஆம் பிரதிவாதி ஒரு முத்துராமலிங்கம் என்பவரின் சகோதரர். 18 ஆம் பிரதிவாதி என் மருகமன். மேற்படி முத்துராமலிங்கம் தான் சொத்துக்களை எங்கள் பெயரில் வாங்கினார் என்றால் சரியல்ல. நாங்கள்தான் வாங்கினோம். விற்றவர்களிடம் 18 ஆம் பிரதிவாதி ஒப்பந்தம் போட்டிருந்தார். நிரூபணவாக்குமூலத்தில் 19.02.2009 தேதியிட்ட ஒப்பந்தமாக சொல்லியிருப்பதைதான் 18 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஒப்பந்தம் என்று சொல்கிறேன். தாவா 2 ஆம்லக்கச் சொத்தை 7 ஆம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகள், 8, 9 பிரதிவாதிகள் ஆகியோரிடமிருந்து வாங்கினோம். அதாவது 18 முதல் 22 பிரதிவாதிகளாகிய நாங்கள் மொத்தமாக வாங்கினோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.35 ல் பணப்பற்றுவிபரத்தில் 18.01.2012 ல் கிரையஒப்பந்தம் செய்து முன்பணமாக ரூ.30,000 நாங்கள் கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 19.02.2009 ல் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.35 கிரையத்திற்கு முன்பு சொத்திற்கான வில்லங்கசான்றிதழ் எடுத்துப் பார்க்கவில்லை. வில்லங்கசான்றிதழில் 19.01.2012 தேதியிட்ட வாதிகள் 23 ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் எங்களுக்கு தெரிய வந்ததால 18.01.2012 ஒப்பந்தம் இருப்பதாக வா.சா.ஆ.35 ல் சுயநலவாசகமாக எழுதிக் கொண்டோம் என்றால் சரியல்ல. 19.01.2012 தேதியிட்ட கிரையஒப்பந்தம் பற்றி எங்களுக்கு அப்போதே தெரியுமென்றும் அந்த ஒப்பந்தத்தில் இந்த வழக்கு பற்றி விபரங்கள் சொல்லப்பட்ட விபரமும் எங்களுக்குத் தெரியுமென்றும் அதை மறைத்து இந்த வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 7 ஆம் பிரதிவாதி தன் மகளை யாருக்கு திருமணம் செய்து வைத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி முத்துராமலிங்கத்திற்கும் 23, 24 பிரதிவாதிகளின்

தகப்பனார் சொக்கலிங்கம் பிள்ளைக்கும் பாதை சம்பந்தமாக வழக்கு நடந்தது என்றால் எனக்குத் தெரியாது. தாவா 2 ஆம் லக்கச் சொத்தில் 1/6 பாகத்தை 23 ஆம் பிரதிவாதி வாதிகளிடமிருந்து கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். தாவா 1 ஆம் லக்கச் சொத்தில் 18 ஆம் பிரதிவாதி முதலில் 6.66 செண்டும், பிறகு 6.66 செண்டும் கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரையப்பத்திரங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட பி.சா.ஆ.9 மற்றும் 10. 24 ஆம் பிரதிவாதி 2 மற்றும் 8 பிரதிவாதிகளிடம் தாவா 1 ஆம் லக்கச் சொத்தில் 6.66 செண்ட் இடத்தை வா.சா.ஆ.36 படி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா1, 2 லக்கச் சொத்துக்கள் சீமைக்கருவேல மரம் வளர்ந்து பயன்படுத்த முடியாத நிலைமையில் தற்போது உள்ளது என்றால் சரிதான். அதில் தண்ணீர் இல்லாததால் நாங்கள் விவசாயம் செய்ய முடியவில்லை. தாவா 2 ஆம் லக்கச் சொத்து வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் பிரித்துதான் எங்களுக்கு கிரையம் கொடுத்தார்கள். சாட்சி மீண்டும் வீட்டுமனைகளாக பிரிக்கவில்லை என்றும் 6.66 செண்ட் இடத்தை பிரித்துக் கொடுத்தார்கள் என்றும் மாற்றிக் கூறுகிறார். பி.சா.ஆ.11 கிரையத்தை 7 ஆம் பிரதிவாதி தனக்காகவும், தன் மூன்று மைனர் பிள்ளைகளுக்காகவும் எனக்கு எழுதிக் கொடுத்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொத்து குறித்து வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்று கிரையம் பெற்றேனா என்றால் 18 ஆம் பிரதிவாதிதான் அதை பார்த்து கொண்டார் நான் வெளியூரில் இருந்தேன். இளவர்களின் பாகத்தை விற்பதற்கு 7 ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்அனுமதி பெற்றாரா என்றால் இல்லை. 20 ஆம் பிரதிவாதி தாவா 1 ஆம்லக்கச் சொத்தில் பி.சா.ஆ.12 படி 2904 சதுரடி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையம் பற்றி எனக்கு நேரில் தெரியும். 22 ஆம் பிரதிவாதி பி.சா.ஆ.13 படி தாவா 1 ஆம் லக்கச் சொத்தில் 6.66 செண்ட் இடத்தை 3, 9 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். நாங்கள் வாங்கிய சொத்துக்களைப் பொறுத்த வரையில் விற்ற நபர்களுக்கு சொத்துக்கள் எப்படி பாத்தியப்பட்டது என்பது

எங்களுக்குத் தெரியாது. நாங்கள் மூலப்பத்திரத்தை வாங்கி பார்க்கவில்லை. 18 ஆம் பிரதிவாதிதான் பார்த்தார். 7 ஆம் பிரதிவாதி தன் மகளை மேற்படி முத்துராமலிங்கத்தின் பங்காளி வீட்டில் திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. முத்துராமலிங்கத்திற்கும், சொக்கலிங்கத்திற்கும் ஏற்பட்ட பாதை தகராறு முன்விரோதம் காரணமாகவும், முத்துராமலிங்கத்திற்கும் 7 ஆம் பிரதிவாதிக்கும் இருந்த உறவுமுறையினாலும் வாதிகளை மோசம் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வாதிகள் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்தும் அதே சொத்தை எவ்வித பணமும் கொடுக்காமல் பி.சா.ஆ.35 படி மோசடியாக கிரையப்பத்திரத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.9 முதல 13 ஆவணங்கள் பிரதி பலன் எதுவும் இல்லாமல் பெயரளவில் எழுதப்பட்டன என்றால் சரியல்ல. மேற்படி முத்துராமலிங்கம் திறந்த நீதிமன்றத்தில் உட்கார்ந்து கொண்டுள்ளார், அவர் முதலில் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தார். அவர் இதற்கு முன்பு என் பெயரில் சொத்துக்களை வாங்கி ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் நல்லெண்ணத்தில் கிரையம் பெறவில்லை என்றும், சரியான பிரதிபலனுக்காகவும் கிரையம் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நாங்கள் பெற்ற கிரையங்கள் எதுவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருப்பதை தெரிந்தே கிரையப்பத்திரங்கள் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தாவாச் சொத்துக்களில் உரிமை கொண்டாட எங்களுக்குத் தகுதியில்லை என்றால் சரியல்ல.

**<u>7, 13 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வா.சா.ஆ.35 தகுந்த பிரதிபலனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதை காட்ட அதிலுள்ள சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேன். கிரையம் வாங்கிய தேதியில் இருந்து சொத்தை நாங்கள் தான் அனுபவித்து

வருகிறோம். அதற்கு வரி செலுத்தி வருகிறோமா என்றால் தற்போது அதற்கு வரி போடுவதில்லை. தண்ணீர் இல்லாததால் விவசாயம் செய்ய முடியவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.